ரூ.1 கோடி பருத்தி விற்பனை

First Published : 02 Feb 2012 12:00:23 PM IST

சேலம், பிப். 1: வாழப்பாடி வேளாண்மை உற்பத்தியாளர் கூட்டுறவு விற்பனைச் சங்கத்தில் புதன்கிழமை நடைபெற்ற ஏலத்தில் ரூ.1 கோடிக்கு பருத்தி மூட்டைகள் விற்பனையாகின.

சேலம் வேளாண்மை உற்பத்தியாளர்கள் கூட்டுறவு விற்பனை சங்கம் மூலம் வாழப்பாடி கிளையில் தனிஅலுவலர் கே.முத்துராஜ் தலைமையில் பருத்தி ஏலம் நடைபெற்றது.

இதில் பெத்தநாயக்கன்பாளையம், மகுடஞ்சாவடி, சுக்கியம்பாளையம், கருமந்துறை, அரியலூர், விழுப்புரம், கவர்பண்ணை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த 900 விவசாயிகள் கலந்து கொண்டனர். இதேபோல் சேலம், கொங்கணாபுரம், மகுடஞ்சாவடி, தேனி, அன்னூர், பெருந்துறை ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வியாபாரிகள் பங்கேற்றனர்.

ஏலத்தில், 7 ஆயிரம் மூட்டைகள் பருத்தி ரூ.1 கோடிக்கு விற்பனையாகின. டி.சி.எச். ரகம் அதிகபட்சம் ரூ.5,469, குறைந்த பட்சம் ரூ.4,989, ஆர்.சி.எச். ரகம் அதிகபட்சம் ரூ.4,369, குறைந்த பட்சம் ரூ.3,900 விற்கப்பட்டன. ஏலம் போன பருத்திக்கான பணம் உடனுக்குடன் பட்டுவாடா செய்யப்பட்டது.

---

உணவுப் பொருள் பணவீக்கம் குறித்த வெளியீடு கைவிடப்படுகிறது

பிப்ரவரி 03,2012,00:05

புதுடில்லி: மத்திய அரசு, உணவுப் பொருள் பணவீக்கம் குறித்த அறிவிப்பை, வாரந்தோறும் வியாழக்கிழமை அறிவித்து வந்தது. இனி, உணவுப் பொருள் பணவீக்கம் குறித்த புள்ளி விவர வெளியீடு கைவிடப்படுவதாக, மத்திய வர்த்தகம் மற்றும் தொழில்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது. இதையடுத்து, இந்த வாரம் முதல், உணவுப் பொருள் பணவீக்கம் வெளிவராது.



அதேசமயம், மொத்த விலைக் குறியீட்டு எண் அடிப்படையில் கணக்கிடப்படும் பொதுப் பணவீக்கம் குறித்த அறிவிப்பு, எப்போதும் போன்று, மாதந்தோறும் வெளியிடப்படும். இதில், உணவுப் பொருட்கள், உணவு சாராத பொருட்கள், எரிபொருட்கள், தயாரிப்பு பொருட்கள் போன்றவற்றை உள்ளடக்கிய பணவீக்க புள்ளி விவரங்கள் வெளியிடப்படும் என, இந்த அமைச்சகம் தெரிவித்துள்ளது.கடந்த ஜனவரி மாதத்திற்கான பொது பணவீக்கம் குறித்த அறிவிப்பு, வரும் 14ம் தேதி வெளியிடப்படும்.இது குறித்து மத்திய வர்த்தக அமைச்சகம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில், பிரதமர் மன்மோகன் சிங் தலைமையிலான, பொருளாதார விவகாரங்களுக்கான அமைச்சரவை கூட்டத்தில், வாரந்தோறும் உணவுப் பொருள் பணவீக்கம் குறித்த அறிவிப்பு வெளியிடுவதை கைவிடும் வகையில் முடிவெடுக்கப்பட்டது. உணவுப் பொருள் பணவீக்கம் குறித்து, வாரந்தோறும் வெளியிடப்படும் புள்ளி விவரத்தில், அனைத்து பொருட்களின் விலை விவரம் குறித்த புள்ளி விவரங்களை துல்லியமாக கணக்கிட முடியவில்லை. இதன் காரணமாகவே, உணவுப் பொருள் பணவீக்கம் குறித்த வாராந்திர புள்ளி விவரம் கைவிடப்படுவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.ஜனவரி 14ம் தேதியுடன் நிறைவடைந்த வாரத்தில், உணவுப் பொருள் பணவீக்கம், 1.03 சதவீதம் என்ற அளவில் இருந்ததாக, கடந்த ஜனவரி 27ம் தேதி அறிவிப்பு வெளியானது. கடந்த டிசம்பரில், நாட்டின் பொதுப் பணவீக்கம், 7.47 சதவீதம் என்ற அளவில் குறைந்திருந்தது. இதையடுத்தே ரிசர்வ் வங்கி, அண்மையில், அதன் நிதி ஆய்வு அறிவிப்பில் வங்கிகளுக்கான ரொக்க இருப்பு விகிதத்தை (சி.ஆர்.ஆர்) 0.50 சதவீதம் குறைத்து, 6 சதவீதத்திலிருந்து, 5.50 சதவீதமாக குறைத்தது.மத்திய அரசு, கடந்த 2010ம் ஆண்டு செப்டம்பர் மாதத்தில், மொத்த விலைக் குறியீட்டு எண் கணக்கிடப்படுவதற்கான அடிப்படை ஆண்டை, 1993-94லிருந்து, 2004-05 ஆக மாற்றி அமைத்தது. இதையடுத்து, முதலில், பணவீக்கம் கணக்கிடுவதற்கான, 435 பொருட்களின் எண்ணிக்கை, பின்பு, 676 ஆக அதிகரிக்கப்பட்டது.இதே போன்று, கடந்த 2009ம் ஆண்டு அக்டோபர் வரை, நாட்டின் பணவீக்கம் குறித்த அறிவிப்பு, வாரந்தோறும் அறிவிக்கப்பட்டு வந்தது. பின்பு, இது, மாதம் ஒரு முறை என மாற்றியமைக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

**நெல் நடவு இயந்திர செயல் விளக்க பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2012,02:20 IST

ஈரோடு: கூட்டுறவுத்துறை சார்பில், அம்மாபேட்டை, ஊமாரெட்டியூரில் நெல் நடவு இயந்திரம் பற்றிய செயல்விளக்க பயிற்சி மற்றும் கருத்தரங்கு நடந்தது.

ஈரோடு மண்டல கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் பாபு பேசியதாவது:

விவசாயப் பணியில் ஆட்கள் பற்றாக்குறையை போக்க, வேளாண் இயந்திரங்கள் மாநிலம் முழுவதும் வாங்க, முதல் கட்டமாக, 400 தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்களுக்கு தலா, 20 லட்சம் ரூபாய் மானியமாக முதல்வர் ஒதுக்கியுள்ளார். இதை பயன்படுத்தி, கூட்டுறவு சங்கங்கள் சேவை மையங்களை நிறுவி, அப்பகுதி விவசாயிகள் அதிகம் பயன்படுத்தும் இயந்திரங்களை வாங்கி, குறைந்த வாடகைக்கு விட வேண்டும்.

ஈரோடு மாவட்டத்தில், 2011-12ம் ஆண்டில், 31 சங்கங்களில் வேளாண் சேவை மையங்கள் நிறுவ திட்டமிடப்பட்டது. அதில், 13 சங்கங்களில் சேவை மையம் துவக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள, 18 சங்கங்களுக்கும், தலா 20 லட்சம் ரூபாய் மானியம் வழங்கி, இயந்திரங்கள் வாங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும். இவ்வாறு அவர் பேசினார்.

மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தனி அலுவலர் ரேணுகா, அம்மாபேட்டை டவுன் பஞ்சாயத்து தலைவர் செந்தில்குமார், துணைப் பதிவாளர்கள் கோமதி, செந்தில்குமார் மற்றும் பலர் பங்கேற்றனர். சங்க தனி அலுவலர் தியாகராஜன் வரவேற்றார். சங்க செயலாளர் சின்னசாமி நன்றி கூறினார்.

**நுண்ணுயிர் உர தயாரிப்பு இன்று இலவசப்பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2012,01:05 IST

திருச்சி: திருச்சி திருவானைக்காவல் ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரியில், விவசாயிகளுக்கான இலவச நுண்ணுயிர் உரத்தயாரிப்பு பயிற்சி இன்று (3ம் தேதி) நடக்கிறது.

திருச்சி, தஞ்சாவூர் மாவட்ட விவசாய தொழில் வளர்ச்சிக்கும், வேளாண்மையில் மேலும் வளர்ச்சி பெறவும், விவசாயிகளுக்கான நுண்ணுயிர் உரத்தயாரிப்பு குறித்த இலவச செய்முறைப்பயிற்சி, திருவானைக்காவல் ஸ்ரீமத் ஆண்டவன் கல்லூரியில் இன்று (3ம் தேதி) நடக்கிறது.

நெல், வாழை, கரும்பு, மலர், எண்ணெய் வித்துகள், காய்கறி போன்ற வேளாண் சாகுபடிகளில், பழமை மாறாத, நவீன விவசாய முறையில் நுண்ணுயிர் உரத்தயாரிப்பு முறையும், அதை பயன்படுத்துவது குறித்தும் உயிர் அறிவியல் துறை பேராசிரியர்கள் பயிற்சி அளிக்கின்றனர்.

இன்று காலை ஒன்பது மணி முதல் 12 மணி வரை கல்லூரியில் நடக்கும் இலவச பயிற்சியில்

விவசாயிகள் பங்கேற்க, 98431- 92321 என்ற மொபைல் ஃபோன் எண்ணை தொடர்புக்கொள்ளலாம்.

**மண்புழு கழிவு உரம் தயாரிக்கும் பயிற்சி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2012,03:58 IST

தென்காசி:புதூரில் மண்புழு கழிவு உரம் தயாரிக்கும் பயிற்சி முகாம் நடந்தது.செங்கோட்டை வட்டாரம் புதூரில் மண்புழு கழிவு உரம் தயாரிக்கும் பயிற்சி முகாம் நடந்தது. முகாமில் வேளாண்மை உதவி இயக்குநர் கனகம்மாள் பேசும்போது, மண் வளம் பெருகிடவும், மண்ணில் நன்மை செய்யும் நுண்ணுயிர்கள் பல்மடங்கு பெருகிடவும், மண்ணின் நீர்பிடிப்பு திறன் அதிகரித்திடவும் இயற்கை உரங்களான மண்புழு கழிவு உரம் போன்ற உரங்களை எல்லா பயிர்களுக்கும் விவசாயிகள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

துணை வேளாண்மை அலுவலர் சுப்பிரமணியன் பேசும் போது, தேசிய வேளாண்மை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் இயற்கை வேளாண்மையை விவசாயிகளிடையே பிரபலப்படுத்தும் வகையில் மண்புழு கழிவு உரம் தயாரிக்க விவசாயிகளுக்கு பயிற்சி அளிக்கப்படுகிறது என்றார்.வேளாண்மை உதவி அலுவலர் மாரியப்பன் மண்புழு தயாரிப்பது குறித்து செயல் விளக்கம் செய்து காட்டினார். ஏற்பாடுகளை உதவி வேளாண்மை அலுவலர் சிக்கந்தர் அமீன் செய்திருந்தார்.

**உணவு பாதுகாப்பு விளக்க கூட்டம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 03,2012,03:17 IST

தூத்துக்குடி:அகில இந்திய வர்த்தக தொழிற் சங்கத்தில் உணவு பாதுகாப்பு பற்றிய விளக்க கூட்டம் நடந்தது.தூத்துக்குடி அகில இந்திய வர்த்தக தொழிற்சங்கத்தின் சிறப்பு கூட்டம் சங்க பொதுச் செயலாளர் ராஜாசங்கரலிங்கம் தலைமையில் நடந்தது. செயற்குழு உறுப்பினர் ராஜா ஸ்டாலின் வரவேற்றார். தூத்துக்குடி மாவட்ட உணவு பாதுகாப்பு தர பொறுப்பு அதிகாரி டாக்டர் ஜெகதீஷ்சந்திரபோஸ் உணவு பாதுகாப்பு மற்றும் தரச் சட்டம் பற்றி பேசினார். உணவு பாதுகாப்பு அதிகாரிகள் சந்திரமோகன், ராமகிருஷ்ணன்ஆகியோரும் பேசினர். கூட்டத்தில் சங்க செயற்குழு உறுப்பினர் கிரஹராஜ், அரவிந்த்குமார், நியூட்டன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**கோழி தீவனமாகும் உலர்ந்த இறால் தலை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2012,23:55 IST

முதுநகர் : கடலூர் முதுநகரில், உலர்ந்த இறால் தலைகள், கோழி தீவனத்திற்காக நாமக்கல் மாவட்டத்திற்கு அனுப்பப்படுகின்றன. கடலூர் முதுநகரில், 50க்கும் மேற்பட்ட இறால் கம்பெனிகள், இயங்கி வருகின்றன. இக்கம்பெனிகளில் இறால்கள் பதப்படுத்தப்பட்டு, வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்றன. இந்த இறால் கம்பெனிகளில், வீணாகும் இறால் தலைகள் உள்ளிட்டவைகளை, அப்பகுதியில் உள்ள, 30க்கும் மேற்பட்ட சிறு வியாபாரிகள் மற்றும் பெண்கள் வாங்கிச் சென்று, வெயிலில் உலர்த்தி பதப்படுத்துகின்றனர். உலர்ந்த இறால் தலைகளை மூட்டைகளில் கட்டி, கோழித்தீவனம் தயாரிப்பதற்காக, நாமக்கல் பகுதிக்கு லாரிகளில் அனுப்புகின்றனர். 1 கிலோ 10 ரூபாய் வரை விற்பனையாகும் இறால் தலைகளை, குறைந்த விலைக்கு வாங்கி, அனுப்புவதன் மூலம் கணிசமாக லாபம் ஈட்ட முடிவதாகவும், இதனால் தங்கள் பகுதியில் புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்க முடிவதாகவும், இத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் கூறுகின்றனர்.

**தென்னை நுண்ணூட்ட சத்து இருப்பு வைப்பு**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2012,23:35 IST

பொள்ளாச்சி : வடக்கு வேளாண் துறை அலுவலகத்தில் தென்னை நுண்ணூட்ட சத்து 2 டன் இருப்பு வைக்கப்பட்டுள்ளது. பொள்ளாச்சி வடக்கு வேளாண் துறை அலுவலகத்தில் தென்னை விவசாயிகளுக்கு வழங்குவதற்காக தென்னை நுண்ணூட்ட சத்து வந்துள்ளது. வேளாண்துறை இருப்பு அறையில் நுண்ணூட்ட சத்து வைக்கப்பட்டுள்ளது. வேளாண் துறை அலுவலகத்திற்கு வரும் தென்னை விவசாயிகளுக்கு நுண்ணூட்ட சத்தின் பயன்பாடுகள் குறித்து அதிகாரிகள் விளக்கம் அளிக்கின்றனர். வடக்கு ஒன்றிய வேளாண் துறை உதவி இயக்குனர் உமாராணி, வேளாண் வளர்ச்சி அலுவலர் விஸ்வநாதன் ஆகியோர் கூறுகையில், ""வடக்கு ஒன்றியத்திற்கு நுண்ணூட்ட சத்து இரண்டு டன் வந்துள்ளது. ஒரு கிலோ 55.30 ரூபாய்க்கு விற்கப்படுகிறது. தென்னை மரத்திற்கு ஆண்டுக்கு ஒரு கிலோ நுண்ணூட்ட சத்து கொடுக்க வேண்டும். நுண்ணூட்ட சத்து கொடுப்பதால் தென்னை மரத்தில் குரும்பல் உதிர்வது, ஒல்லிக்காய் வருவது குறையும். மேலும், மரத்தில் காய்ப்பு திறன் அதிகரிக்கும். இதுபற்றி விவசாயிகளுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறோம்'' என்றனர்.

**விவசாய தொழில்களுக்கு "நபார்டு' வங்கி உதவி**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2012,23:27 IST

அன்னூர் : "விவசாயம் சார்ந்த தொழில்களுக்கு, "நபார்டு' வங்கி உதவி வருகிறது' என, உதவி பொதுமேலாளர் அன்னூரில் தெரிவித்தார். பள்ளி மாணவ, மாணவியருக்கான கல்வி விழிப்புணர்வு முகாம், "நபார்டு' வங்கி மற்றும் "சேவா பாரதி' தொண்டு நிறுவனம் சார்பில் குருக்கம்பாளையத்தில் நடந்தது. சேவா பாரதி மாவட்ட துணைத் தலைவர் சுப்புராஜ் வரவேற்றார். "நபார்டு' வங்கி உதவி பொது மேலாளர் இனிகோ அருள்செல்வன் பேசியதாவது: விவசாயம் சார்ந்த தொழில்கள், கிராமப்புற முன்னேற்றம் ஆகியவற்றுக்காக "நபார்டு' வங்கி உதவி வருகிறது. எதிர்காலத்தில் நல்ல வேலைவாய்ப்புகள் உள்ளன. மாணவர்கள் நன்கு படிப்பதன் மூலம், சிறந்த வேலை பெற்று முன்னேறலாம்," என்றார். "சேவா பாரதி' மாநிலத் தலைவர் அரங்க ராமநாதன் பேசுகையில்,""இந்தியா முன்பு, உலகில் உள்ள அனைத்து நாடுகளுக்கும் குருவாக இருந்தது. அதற்கு நாட்டின் தொன்மையான பண்பாடு, கலாசாரம் முக்கிய காரணம், மாணவர்கள் படிப்புடன் நம் கலாசாரம், பண்பாட்டையும் கற்க வேண்டும்," என்றார். மாநில செயலாளர் பரமேஸ்வரன் பேசுகையில்,""மாணவ, மாணவியர் பெற்றோரை மதிக்க வேண்டும். கல்விக்கு இணையான செல்வம், உலகில் வேறில்லை," என்றார். எஸ்.என்.எஸ்., கல்லூரி பேராசிரியர் திருமூர்த்தி பேசுகையில்,""மாணவர்கள் பள்ளி படிப்பின் போதே, தங்கள் எதிர்கால திட்டத்தை, மனதில் உருவாக்கிக் கொள்ள வேண்டும். அதைப்பற்றிய எண்ணங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும். எண்ணம் தீவிரமானால்,செயல் துவங்கி விடும்," என்றார். "நபார்டு' வங்கி சார்பில், மரக்கன்றுகள் வழங்கப்பட்டன. ஊராட்சி துணைத் தலைவர் நளினி, சேவா பாரதி நிர்வாகி ராஜேந்திரன் உள்ளிட்டோர் பங்கேற்றனர். மாவட்ட செயலாளர் பாலசுப்பிரமணி நன்றி தெரிவித்தார்.

**உழவர் சந்தையில் ஒரு கோடியை நெருங்கியது காய்கறி விற்பனை**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2012,23:50 IST

உடுமலை : உடுமலை உழவர் சந்தையில், கடந்த மாதம் 87 லட்சத்து 65 ஆயிரத்து 492 ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. உடுமலை உழவர் சந்தையில், கடந்த மாதம் நாள் ஒன்றுக்கு இரண்டு லட்சத்து 82 ஆயிரத்து 758 ரூபாய்க்கு காய்கறிகள் விற்பனை செய்யப்பட்டன. விற்பனை செய்ய தினசரி 66 விவசாயிகளும்; காய்கறிகள் வாங்க மூன்று ஆயிரத்து 96 நுகர்வோர்களும் தினசரி சந்தைக்கு வந்தனர். கடந்த மாதம் மொத்தம் 87 லட்சத்து 65 ஆயிரத்து

492 ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டன. இரண்டு ஆயிரத்து 55 விவசாயிகளும்; 95 ஆயிரத்து 979 நுகர்வோர்களும் சந்தைக்கு வந்தனர். சந்தையில் விற்பனை செய்ய விரும்பும் விவசாயிகள் சிட்டா அடங்கலுடன் வந்தால், உழவர் அடையாள அட்டை வழங்கப்படும். இத்தகவலை உழவர் சந்தை உதவி நிர்வாக அலுவலர் ராஜாமணி தெரிவித்தார்.

**சொட்டு நீர் பாசன கருவிகள் அமைக்க மானியம்**

பதிவு செய்த நாள் : பிப்ரவரி 02,2012,23:38 IST

உடுமலை : வேளாண் பொறியியல் துறை சார்பில் நீர் வள நில வள திட்டத்தின் கீழ் விவசாயிகளுக்கு சொட்டு நீர் பாசன கருவிகள் அமைக்க மானியம் வழங்கப்படுகிறது.உடுமலை வேளாண் பொறியியல் துறை உதவி செயற்பொறியாளர் நாகராஜன் அறிக்கை:பி.ஏ.பி., பாசனப்பகுதியிலுள்ள ஆழியாறு மற்றும் பாலாறு வடிநிலங்களில் கடந்த 2007 ம் ஆண்டு முதல் உலக வங்கி நிதியுதவியுடன் நீர் வள நில வள திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் கீழ் வேளாண் பொறியியல் துறை சார்பில் நடப்பாண்டில் சொட்டு நீர் பாசன கருவிகள் அமைக்க விவசாயிகளுக்கு மானியம் வழங்கப்படுகிறது. குறு விவசாயிகளுக்கு ஒரு எக்டரும், சிறு விவசாயிகளுக்கு இரண்டு எக்டரும் சொட்டு நீர் பாசனம் அமைக்க உச்சவரம்பு நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

நூறு சதவீத மானியத்தில் ஒரு பயனாளிக்கு எல்லா வித பயிர்களுக்கும் 43 ஆயிரத்து 816 ரூபாய் அல்லது அரசு நிர்ணயித்த அலகுத்தொகை அல்லது பட்டியல் தொகை இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். கூடுதல் பரப்பிற்கு அமைக்கப்படும் சொட்டு நீர் பாசன அமைப்பிற்கு 75 சதவீத மானியம் வழங்கப்படும்.

இதர விவசாயிகளுக்கு ஐந்து எக்டருக்கு மிகாமல் அலகுதொகையில் அல்லது பட்டியல் தொகையில் 75 சதவீதம் இதில் எது குறைவோ அத்தொகை மானியமாக வழங்கப்படும். சிறு,குறு விவசாயிகள் தாசில்தாரால் அத்தாட்சி பெற்ற அலுவலரிடம் இருந்து சான்று இணைத்து அந்தந்த பகுதி வேளாண் பொறியியல் துணை உதவி செயற்பொறியாளர் அலுவலகத்தில் விண்ணப்பத்தை சமர்ப்பிக்க வேண்டும். உடுமலை வேளாண் பொறியியல் துறை அலுவலகம் பொள்ளாச்சி ரோட்டிலுள்ள ஒழுங்கு முறை விற்பனை கூட வளாகத்தில் செயல்பட்டு வருகிறது.இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

---

தினகரன்

## பருத்தி அறுவடை பணி தீவிரம் புயல் நிவாரணம் வழங்காததால் நஷ்டத்தை சந்தித்த விவசாயிகள்

உளுந்தூர்பேட்டை: உளுந்தூர்பேட்டை வட்டாரத்தில் ஆசனூர், எறஞ்சி, வலசை, காய்ச்சக்குடி, செங்குறிச்சி, நைனாக்குப்பம், செம்மணங்கூர், ஆரியநத்தம், கூத்தக்குடி, பாண்டூர், நகர் மன்னார்குடி உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட கிராமங்களில் 6 மாத பயிரான வீரிய ஒட்டுரக பருத்தியை அதிக அளவு பயிரிட்டு இருந்தனர்.

சுமார் 100 ஏக்கருக்கு மேல் உளுந்தூர்பேட்டை பகுதியில் பருத்தியை விவசாயிகள் பயிரிட்டு இருந்தனர். பருத்தி நன்கு காய்த்து வந்த நிலையில் கடந்தமாதம் வீசிய தானே புயலால் பருத்தி காய்கள் கீழே உதிர்ந்து நாசமானது. மேலும் செடியும் சாய்ந்து அழுகி போனது. இதனால் பருத்தி பயிரிட்ட விவசாயிகள் கடும் நஷ்டம் அடைந்தனர்.

இதுகுறித்து ஆசனூர் கிராமத்தை சேர்ந்த ராமகொளஞ்சி என்ற விவசாயி கூறிய போது: ஒரு ஏக்கருக்கு ரூ. 20 ஆயிரம் வரை செலவு ஆகிறது. ஆனால் அறுவடை நேரத்தில் தானே புயலினால் பருத்தி காய்கள் விழுந்து நாசமானதால் அதிக அளவு நஷ்டம் ஏற்பட்டுள்ளது. தற்போது அறுவடை நடைபெற்று வரும் நிலையில் ஒரு ஏக்கருக்கு கடந்த ஆண்டு 10 முதல் 15 குவிண்டால் வரை விதை நீக்கப்பட்ட பருத்தி கிடைத்தது.

ஆனால் இந்த ஆண்டு புயல் பாதிப்பினால் 8 குவிண்டால் கிடைப்பதே அரிதாக உள்ளது. செலவு செய்த தொகை கூட கிடைக்கவில்லை. நெல், உளுந்து விவசாய பயிர்களுக்கு அரசு நஷ்டஈடு வழங்கப்பட்டு வரும் நிலையில் பருத்தி பயிரிட்ட விவசாயிகளுக்கு மட்டும் இதுவரை எவ்வித நிவாரண உதவிகளும் வழங்க வில்லை. இது குறித்து வேளாண் துறை அதிகாரிகளிடம் கேட்டதற்கு அரசு நிவாரண உதவி ஒதுக்கீடு செய்யப்பட வில்லை என தெரிவித்தார். எனவே பாதிக்கப்பட்ட பருத்தி விவசாயிகளுக்கும் உரிய நிவாரண உதவிகள் வழங்க அரசு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என பருத்தி பயிரிட்ட விவசாயிகள் அரசுக்கு கோரிக்கை வைத்துள்ளனர்.

## வீட்டில் தோட்டம் அமைக்க 50% மானியத்தில் காய்கறி விதைகள் வேளாண் அதிகாரி தகவல்

திருச்சி: வீட்டில் காய்கறி தோட்டம் அமைக்க விவசாயிகளுக்கு 50 சதவீதம் மானியத்தில் காய்கறி விதை விநியோகம் செய்யப்படுவதாக திருச்சி தோட்டக்கலை துணை இயக்குனர் ஞானசேகரன் தெரிவித்தார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பு:
திருச்சி மாவட்டத்தில் நடப்பு நிதியாண்டில் செயல்படுத்தப்பட்டு வரும் ஒருங்கிணைந்த தோட்டக் கலை அபிவிருத்தி திட்டத்தின் கீழ் ஆடிப்பட்ட காய்கறி விதை பொட்டலங்கள் மற்றும் பல்வேறு உயர் விளைச்சல் தரும் வீரிய ஒட்டு ரக காய்கறி விதைகள் கொள்முதல் செய்யப்பட்டு வட்டாரம் வாரியாக தோட்டக்கலை உதவி இயக்குனர்களுக்கு அனுப்பப்பட்டு விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. இதில் இதுவரை ரூ.4.5 லட்சம் மதிப்புள்ள மிளகாய், வெங்காயம், தக்காளி, அவரை, புடல் மற்றும் வீட்டு காய்கறி தோட்டம் அமைக்க விவசாயிகளுக்கு 50% மானியத்தில் காய்கறி விதை பொட் டலங்கள் விநியோகம் செய்யப்பட்டுள்ளது.

ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டு திட்டத்தின் கீழ் ஒவ்வொரு ஆண்டும் ரூ.3.321 லட்சம் மதிப்பில் பழக்கன்றுகள், காய்கறி விதைகள், பயிர் பாதுகாப்பு கருவிகள், சொட்டுநீர் பாசன கருவி கள் மற்றும் பயிற்சிக்கென பழங்குடியின வகுப்பு விவசாயிகளுக்கு (பச்சைமலை பகுதி மட்டும்) நிதி பெறப் பட்டு செலவினம் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

நடப்பாண்டிற்கு நிதி ஒதுக்கப்படாத நிலையில் கடந்த ஆண்டு இலக்கின் அடிப்படையில் பயனடை வோர் பட்டியல் துறையூர் மற்றும் உப்பிலியபுரம் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களால் தேர்வு செய்ய ப்பட்டு பழக்கன்றுகள், காய்கறி விதை கள் விநியோகம் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

திருச்சி மாவட்டத்தில் தேசிய தோட்டக்கலை இயக்க திட்டத்திற்கான திட்ட இலக்கு ரூ.3.30 கோடி பெறப்பட்டு வட் டார தோட்டக்கலை உதவி இயக்குநர்களால் பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டு திட்டங்கள் செயல்படுத்தப்பட்டு வருகிறது என்றார்.

---

தினத் தந்தி

## ஏற்றுமதி உயர்ந்து வரும் நிலையில் தமிழகத்தை விட துபாயில் தேங்காய் விலை குறைவு



*பி கே கிருஷ்ணகுமார்*

*கொச்சி*

*கேரளா மற்றும் தமிழகத்திலிருந்து தேங்காய் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படுகிறது. என்றாலும் ஏற்றுமதி செய்யும் இந்த மாநிலங்களை விட இறக்குமதி செய்யும் துபாயில் தேங்காய் விலை குறைவாக உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.*

*2 மடங்கு அதிகரிப்பு*

*கடந்த 2011–ஆம் ஆண்டில் தேங்காய் ஏற்றுமதி, முந்தைய 2010–ஆம் ஆண்டைக் காட்டிலும் இரண்டு மடங்கு அதிகரித்துள்ளது. இதில் 30,000 டன் தேங்காய் வளைகுடா நாடுகளுக்கு மட்டுமே சென்றுள்ளது. சென்ற 2010–11–ஆம் நிதி ஆண்டின் 15,751 டன் தேங்காய் ஏற்றுமதி செய்யப்பட்டுள்ளது.*

*இது குறித்து ஆலிவ் எக்ஸ்போர்ட்ஸ் நிறுவனத்தின் நிர்வாக இயக்குனர் முகம்மது அசரப் கூறும்போது, "வளைகுடா நாடுகளில் தேங்காய்க்கான தேவைப்பாடு தொடர்ந்து உயர்ந்து வருகிறது. மாதம் ஒன்றுக்கு 6 கன்டெய்னர்களில் தேங்காய்களை அங்கு அனுப்புகிறோம். பெரும்பாலும் தமிழகத்தில் பொள்ளாச்சி மண்டலத்திலுள்ள தென்னந்தோப்புகளிலிருந்து தேங்காய்களை வாங்குகிறோம்" என்று தெரிவித்தார்.*

*தென் மாநிலங்களில் தேங்காய் விளைச்சல் அமோக வளர்ச்சி காண்பதற்கு வாய்ப்பு உள்ளது. இதனால் ஏற்றுமதிக்கான வாய்ப்புகளும் அதிகரித்து வருவதாக தெரிகிறது. மேலும் தேங்காய் ஏற்றுமதியில் பல புதிய நிறுவனங்கள் களமிறங்கி வருகின்றன. இதனால் இப்பிரிவில் கடும் போட்டி உருவாகி வருகிறது. இதன் விளைவாக துபாயில் தமிழ்நாடு, கேரள மாநிலங்களின்*

தேங்காய்கள் குவிந்து கொண்டிருக்கின்றன.

"போட்டி அதிகரித்து விட்டதால் எமது நிறுவனத்தின் ஏற்றுமதியில் சற்றே பின்னடைவு ஏற்பட்டுள்ளது. முன்பு ஒரு கன்டெய்னருக்கு 50,000 தேங்காய்கள் என்ற அளவில் மாதம் ஒன்றுக்கு 15 கன்டெய்னர்களை அனுப்பிக் கொண்டிருந்தோம். இப்போது இந்த எண்ணிக்கை பெரிதும் குறைந்து விட்டது" என்று ஃபேர் எக்ஸ்போர்ட்ஸ் இந்தியா நிறுவனத்தின் பொது மேலாளர் சஜீத் கூறினார்.

பொதுவாக ஒரு பொருள் அதிக அளவில் ஏற்றுமதி செய்யப்படும்போது, அந்த ஏற்றுமதி சந்தையில் அதன் விலை குறைவாக இருக்கும். அந்தப் பொருள் எங்கே இறக்குமதியாகிறதோ அங்கு விலை அதிகமாக இருக்கும். ஆனால் தற்போது தேங்காயைப் பொறுத்தவரை இந்த விதியில் தலைகீழ் மாற்றம் ஏற்பட்டுள்ளது. கேரள மாநிலத்தில் தேங்காய் ஒன்று ரூ.11 அல்லது ரூ.12 என்ற அளவில் விற்பனை செய்யப்படுகிறது. ஆனால் துபாயில் ஒரு தேங்காய் ரூ.8–க்கு விற்பனையாகிறது.

வளைகுடா நாடுகள்

வளைகுடா நாடுகள் இலங்கையிலிருந்து தேங்காய் இறக்குமதி செய்வதற்கு சென்ற ஆண்டில் தடை விதித்து விட்டன. இதனால் இந்தியாவின் ஏற்றுமதி சூடுபிடித்தது. பல ஏற்றுமதியாளர்கள் போட்டி போட்டுக் கொண்டு தேங்காய் ஏற்றுமதி செய்யத் தொடங்கினர். துபாயில் தேங்காய்களுக்கான தேவைப்பாடு அதிகமாக இருந்தாலும் அளவுக்கு மீறி வந்து குவிந்து கொண்டிருப்பதால் விலை சரிவடைந்துள்ளதாக வர்த்தக வட்டாரங்கள் தெரிவித்தன.